**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17–ஆம் தேதி புதன்கிழமை**

**I.A.No.6/2024 in O.S.No.19/2015**

1. குஞ்சம்மாள்
2. வீராசாமி
3. செல்வராஜ்
4. பழனிசாமி
5. சத்யமூர்த்தி
6. பொன்மொழி
7. பொன்னரசி
8. கௌதமன்
9. கௌசல்யா

... மனுதாரர்கள்/ வாதிகள்

.... எதிர் .....

1. காளியம்மாள்
2. பழனியம்மாள்
3. கிருஷ்ணம்மாள்

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் கட்டளை 16 விதி 1 & 2, பிரிவு 151 சி.பி.சி.–ன்படி மனுவில் கண்ட சாட்சியை மனுவில் கண்ட ஆதரவுகளுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 02.12.2024 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 25.08.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 17.09.2025 |
| மனுதாரர்கள்/ வாதிகளுக்காக | : | திரு.K.விஜயகுமார் – வழக்கறிஞர் |

எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகளுக்காக : திரு.A.ஜாபர் சேட் – வழக்கறிஞர்

**1). மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர் ஏனைய மனுதாரர்களுக்காகவும், இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். முதல் மனுதாரர்/வாதியின் கணவரான மாமூண்டி கவுண்டரின் அக்கா மகளான சிறும்பாயிக்கு கிரக தோசம் இருந்ததாலும் மேற்படி மாமூண்டி கவுண்டருக்கு தார தோசம் இருந்ததாலும், மேற்படி மனுதாரரின் தாயாரையும் சிறும்பாயியையும் 1948–ம் வருடம் ஒரே மேடையில் வைத்து சாஸ்திர படி இருவரையும் திருமணம் செய்துள்ளார். முதலில் முதல் வாதியான குஞ்சம்மாளுக்கு முதலில் தாலி கட்டியுள்ளார். மேற்படி மாமூண்டி கவுண்டரும் குஞ்சம்மாளும் ஒற்றுமையாக கணவன், மனைவியாக வாழ்ந்து வர மேற்படியார்களுக்கு இம்மனுவின் மனுதாரர்களான 3 முதல் 5 வாதிகளும், ஒரு நல்லுசாமி என்பவரும் வாரிசுசாக பிறக்க, மேற்படி நல்லுசாமி அஞ்சலை என்பவரை திருமணம் செய்ய அதன் மூலம் பிறந்தவர்களே 6 முதல் 9 வாதிகள். பின்னர் மேற்படி அஞ்சலையும் இறந்துபோய்யுள்ளார். வழக்கு சொத்துக்களில் சில சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். வழக்கு சொத்துக்கள் அனைத்துமே மாமூண்டி கவுண்டர் மற்றும் வாதிகள், பிரதிவாதிகளுக்கு அடங்கிய கூட்டுக்குடும்ப சொத்துக்கள் ஆகும். மேற்படி மாமூண்டி கவுண்டர் வழக்கு சொத்தில் பைப் லைன் போடுவதற்கும் கிணற்றை ஆழப்படுத்துவதற்கும் கடவூர் இந்திய ஓவர் சீஸ் வங்கியில் ரூ.3,00,000/– கடன் பெற்று தற்பொழுது வரை ரூ.10,00,000/–த்திற்கு மேலாக உள்ளது. மேற்படி மாமூண்டி கவுண்டர் இந்திய ஓவர் சீஸ் வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்கின்ற சங்கதியை நிரூபணம் செய்ய மேற்படி வங்கி கிளை மேலாளரை விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்பதால் மேற்படியாரை விசாரணை செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). முதல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரரின் மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர

ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. மனுதாரரின் தந்தை எப்பொழுது கடன் வாங்கினார் என குறிப்பிட்டு கூறவில்லை. வங்கி அதிகாரியை அழைத்து விசாரிக்க தேவையில்லை. அசல் வழக்கானது 10 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த நிலையில் அசல் வழக்கினை காலதாமதப்படுத்தவேண்டும் என்கின்ற நோக்கத்திற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் இம்மனுவினை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கூறியுள்ளார்.

3). இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கப்பத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

4). **தீர்வு :–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, மனுதார்கள்/வாதிகள் தரப்பில், இரண்டாவது வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு இதர சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு சங்கதிகளை ஆட்சேபனை செய்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகளுக்கு அவர்கள் வழக்கினை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும். இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமோ ஏற்படப்போவதில்லை. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

7). **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :–** இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :–** இல்லை

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.